முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1267

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.03.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்காவாழ்க
ஓங்காரக்குடில் படைத்த தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓங்கார ஞானம் அருள வந்த அரங்கமகா ஞானியர்க்கு
2. ஞானியர்க்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05 ம் நாள், 19.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஞாலமதில் சுப்ரமணியர் யானும் அருளுவேன்
கனிவோடு உலகமக்களை நோக்கி
கந்தபெருமான் என் சக்தியாகவே வரம் தருகின்ற
3. தருகின்ற அரங்கனே இந்த கலியுகத்தில்
தகுதிமிக்க உயர் ஞானியாகும்
தகுதியோடு அரங்கன் சக்தி கண்டு
தண்டாயுதன் என்னை கலியுகத்தில் காட்சியாக காணவிரும்பும் மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் அரங்கனைத் தொடர்ந்துவந்தால்
மண்ணுலகில் அன்னவர்கட்கு என் காட்சி
காட்சியதும் அரங்கன் தீட்சையாகவும்
கருணைபட அரங்கன் தரும் அருளமுதாகவும்
5. தட்டாது இந்த கலியுகத்தில் சித்திக்கும்
தவராஜன் வழி வருபவர்க்கு இந்த உத்தமமான காட்சி கிட்டும்
கிட்டவே அரங்கனைத் தொடர்ந்து
குறைவில்லா அரங்கன் தர்மத்தை ஏற்று
6. தட்டாது சேவையாற்றும் மக்களெல்லாம்
தனிகாசலன் என்னால் ஞானிகளாவது உறுதி
உறுதிதந்து கலியுகத்தையே மாற்றும்
உத்தமமான சக்தியை அரங்கனுக்கு அழியாமை எனும் பேறாற்றலாக தந்துள்ளேன்
7. தருகவே அரங்கனைத் தொடர்ந்துவந்தால்
தரணியில் யாவர்க்கும் இந்த சித்தி
பெருமைபட இலகுவாய் நடந்தேறி
பிரணவக்குடில் சக்திவழி உலகோரெல்லாம்
8. உலகோரெல்லாம் பிரணவப்பிரியன் என்னருளாலே
பிசகின்றி பெருஞானம் தேறி
வருங்காலங்களில் ஞானிகளாக
வையகத்தை மாற்றும் சக்திகளாகவும் மகான்களாவும் ஆற்றல்கூடி

9. கூடியே அரங்கனால் தேற்றம் பெறுவர்
குருமார்க்கத்தைக் கொண்டு இந்த உலகில்
திருவருளாக உலகமெல்லாம் பரவி
தெய்வீக ஞான ஆட்சியாக இந்த பேருலகம் காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–